# வடக்கு, கிழக்கு தமிழ் முஸ்லிம் இனக்கலவரங்களின் அகப்பாடு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படும் ஒரு விசேட அம்சம் தமிழ்க் கிராமங்களுக்கும், முஸ்லிம் கிராமங்களுக்கும் ஒரு தொடராக இல்லாது ஒன்றுடன் ஒன்று கலந்து காணப்படுவதாகும். முஸ்லிம்கள் உரிமை கொண்டுள்ள விவசாய நிலங்களில் பெரும்பாலானவை தமிழர்களின் கிராமங்களை அடுத்தே காணப்படுகின்றன. குடிசனப்பெருக்கம் காரணமாக, குடியிருப்புக் காணி நிலம் போதாதிருப்பதும், விஸ்தரிப்புக்கான இடம் இல்லாதிருப்பதும், கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எதிர் நோக்கும் ஒரு பாரிய பிரச்சினையாகும். நிலப்பற்றாக்குறைப் பிரச்சனை தீவிரமடைந்தமையினால் தங்களது பகுதிகளும் வியாபிப்புக்கு உட்படுத்தப்பட்டுவிடலாம் அல்லது ஆக்கிரமிக்கப்பட்டுவிடலாம் என்ற அச்சம் இரு சமூகங்களிடையேயும் சந்தேகத்தையும் நெருக்கடியையும் அதிகரிக்கச் செய்தது. இதுகுறித்து சமூக பொருளாதார நிலைமை காரணமாக இரு சமூகங்களிடையேயும் புதிய விதிகளும் கட்டுப்பாடுகளும் தோன்றலாயின. இவ்விதிகளும் கட்டுப்பாடுகளும் பலநூற்றாண்டு காலமாக ஒற்றுமையாக வாழ்ந்துவந்த இரு சமூகங்களும், தற்போது தம்முடைய தனித்துவத்தையும் இனத்துவ உரிமைகளையும் பிரத்தியேகமாகப் பேணிப்பாதுகாக்க முனைந்து நிற்பதைத் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லிம்களது முந்திய தலைமுறைகளின் தொழில் பெரும்பாலும் விவசாயமாக இருப்பதுடன் சிறிதளவு மீன்பிடியுடனும், வியாபாரத்துடனும் தொடர்புடையதாகவே இருந்தது. இலவசக் கல்விமுறையினதும் நெல்லுக்கான உத்தரவாத விலைத்திட்டத்தினதும் அறிமுகங்களின் பின்னர், கிழக்கு மாகாண முஸ்லிம்களது கல்வி நிலையும், பொருளாதாரநிலையும் கணிசமான அளவு முன்னேற்றம் கண்டன. முஸ்லிம்களிடையே பல்கலைக்கழகப்

பட்டதாரிகள், டாக்டர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், சட்ட வல்லுனர்கள், தொழில் நுட்பவியலாளர்கள், நடுத்தர அரச உத்தியோகஸ்தர்கள் என்போரின் எண்ணிக்கை அதிகரித்தது. குறிப்பாக ஆசிரியர்கள் தொகை இலங்கையின் ஏனைய முஸ்லிம் பகுதிகளை விட வெகுவாக அதிகரித்த விகிதத்தில் கிழக்கு மாகாண முஸ்லிம்களிடையே காணப்படுவதைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. சுருக்கமாகச் சொல்லப்போனால் தற்போது முஸ்லிம்களுக்கான புத்திஜீவித்துவம் கிழக்கு மாகாணத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளது எனக்கூறலாம்.

வடமாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் தமிழர்களும் முஸ்லிம்களும் அமைதியுடனும், சமாதானத்துடனும், ஒத்திணங்கி வாழ்கின்றார்கள் என்று பரவலாகக் கூறப்படும் கருத்துக்கு முரணான வகையில் கடந்த அரை நூற்றாண்டு காலமாக, குறிப்பாக 1948ல் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் தமிழர்களிடையே முஸ்லிம்கள் பற்றிய எதிர்ப்புணர்வும், பகைமையும் கூடுதலாக வளர்ந்து வந்துள்ளது. தங்களைவிட முஸ்லிம்கள் பொருளாதாரரீதியில் வசதியுடன் இருக்கின்றார்கள் என்று தமிழர்கள் நினைக்கிறார்கள். முஸ்லிம் இளைஞர்கள் கல்வியில் முன்னேறியதுடன் பல்கலைக்கழகங்களிலும் தொழில் நுட்பக்கல்லூரிகளிலும் உயர்கல்வி பயிலுவதிலும் தமிழ் இளைஞர்களுடன் போட்டியிட்டு வருகின்றனர். தமிழ் இளைஞர்கள் வேலையற்றிருக்கின்ற சந்தர்ப்பத்தில் முஸ்லிம் இளைஞர்கள் அரசதுறையிலும் தனியார் துறையிலும் கூடுதல் வேலைவாய்ப்புக்களைப் பெற்று முன்னேறுகின்றனர். முஸ்லிம் தலைவர்கள் நாட்டுப்பிரிவினைக் கோரிக்கைகள் எவற்றிற்கும் அனுசரணையாக இல்லாதிருந்த காரணத்தின் பலனாக முஸ்லிம்கள் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களின் நல்லெண்ணத்தைப் பெற்றிருந்த வேளையில் தமக்கெனத் தனியான தமிழ் ஈழம் ஒன்றினை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையிலான போராட்ட நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்தமையால்

தமிழர்கள் அண்மைக்காலங்களில் ஆட்சி செய்த அரசாங்கங்களிலிருந்து தம்மை அன்னியப்படுத்திக் கொண்டனர்.

தமிழர்களது தனி நாட்டுக் கோரிக்கைக்கு அனுதாபம் காட்டாத காரணத்தினால் முஸ்லிம்கள் தமக்கிடையே தோன்றியுள்ள ஒரு ஆபத்து எனத் தமிழர் கருதுகின்றனர்.

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் புவியியல் ரீதியாக அருகருகே வாழ்வதாலும், பொருளாதார அடிப்படையில் ஒருவரில் மற்றவர் தங்கியிருப்தாலும் பல சந்தர்ப்பங்களில் மிக அற்பமான விடயங்களில் கூட பிணக்குகள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. உதாரணமாக தமிழ்ப்பகுதிகளைக் கடந்து தங்கள் வயல்களுக்குச் செல்லும் முஸ்லிம்கள் துன்புறுத்தப்படுதல், வாகனங்கள் கடத்தப்படுதல் முஸ்லிம்களுக்குரிய நெல், கால்நடைகளைத் தமிழர்கள் கொள்ளையிடுதல் போன்ற சம்பவங்கள் காலப்போகில் தமிழ் முஸ்லிம் இனப்பிரச்சினையை மேலும் மோசமடையச் செய்தன.

இலங்கையில் 1983ம் ஆண்டு இடம் பெற்ற இனக்கலவரத்தின் பின்னர் வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்கள் முஸ்லிம்கள்மீது கொண்டுள்ள எதிர்புணர்வையும் வெறுப்பையும் வெளிப்படையாக காட்ட முற்பட்டதைக் காணக் கூடியதாய் இருக்கிறது. முஸ்லிம்கள், தமிழர்களுடைய நிலங்களை அபகரிப்பவர்கள், தமிழ் தொழிலாளர்களைச் சுரண்டப்படுபவர்கள், பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகளில் தங்களது வாய்ப்புகளை இல்லாமலாக்குபவர்கள் எனப் பகிரங்கமாகத் தூசிக்கப்படுகின்றனர்.

நிர்வாக ரீதியில் தமிழர்களது உள்ளூராட்சி, எல்லைக்குள் அமைந்த முஸ்லிம் கிராமங்களுக்குப் பொது வசதிகள் மறுக்கப்பட்டன. முஸ்லிம் பகுதியிலிருந்து தமிழ்ப் போராளிகளால்

துப்பாக்கி முனையில் கப்பம் அறவிடப்பட்டு நகைகள் கொள்ளைகடிக்கப்பட்டன, வாகனங்கள் விவசாய உபகரணங்கள் என்பன அபகரிக்கப்பட்டன.

இத்தகைய சம்பவங்கள் நிம்மதியற்ற நிலையை முஸ்லிம்களிடையே தோற்றுவித்ததுடன் தமிழர்களது தனிநாட்டுக் கோரிக்கை சாத்தியமாகும் பட்சத்தில் அவர்களுடன் அரசியல் பொருளாதார அதிகாரங்களை நீதி நியாயப்படி பகிர்ந்து கொள்ளக்கூடிய சாத்தியம் ஏற்படப்போவதில்லை என்ற உணர்வும் முஸ்லிம்களுக்கிடையே வலுப்பெறத் தொடங்கியது.

1985ம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதிகளில் பிரிவினைவாதிகளின் அதிகரித்த நடவடிக்கைகளுடன் தமிழர்கள் முஸ்லிம்கள் மீது கொண்டிருந்த எதிர்ப்புணர்வு மேலும் உக்கிரமான மாற்றங்களைப் பெற்றது. இதன் விளைவாக தமிழ்ப் பயங்கரவாதிகள் அச்சுறுத்திப் பணம் பறித்தல், துப்பாக்கி முனையிலான ஆட்கடத்தல், நாட்டுப் பிரிவினைக்காக ஒத்துளைக்க வேண்டும் என்ற பலாத்காரம் போன்ற செயல்கள் ஆங்காங்கே பரவலாக இடம் பெறலாயின. இவ்வாறான நிலைமைகளைத் தணிப்பதற்கு ஆயுதம் ஏந்தி முஸ்லிம்கள் தமிழருக்கெதிராக போராட முற்படாது சாத்வீக வழிகளில் பலதரப்பட்ட தற்காப்பு முயற்சிகளில் ஈடுபட்டனர். முஸ்லிம்களை முற்றாக நிலை தளரச் செய்யும் சம்பவம் அம்பாரை மாவட்டத்தில் பெரும்பான்மை முஸ்லிம் நகரமான அக்கரைப்பற்றில் தான் முதன் முதலில் இடம் பெற்றது. இதில் தமிழ்ப் பயங்கரவாதிகள் ஒரு முஸ்லிம் வியாபாரியைக் கொள்ளையடிக்கும் வேளையில் அவரது குடும்பத்தினரைப் பணயக் கைதியாக எடுத்துச் செல்ல முற்பட்டனர். இந்த அடாவடித்தனத்தால் ஆத்திரமடைந்த முஸ்லிம்கள் தமது எதிர்பினை ஒரு அமைதியான ஹர்த்தால் மூலம் எடுத்துக் காட்டினர். 1985ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதியிலிருந்து 12ம் திகதிவரை இந்த ஹர்த்தால் இடம்பெற்றது. அதன்பின் மீண்டும் எல்லாவியாபார நிலையங்களும் 13ஆம் திகதி

திறந்த சந்தர்பத்தில் கடைத் தெருவில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு அரசாங்கத்துடன் தமது ஒத்துழைப்பை பிரகடனப்படுத்துவதும், நாட்டுப் பிரிவினைக் கெதிராக ஒற்றையாட்சி நிலவ வேண்டும் என்ற அரசாங்கக் கொள்கைக்கான தமது பூரண ஆதரவையும் வெளிப்படுத்துவதும் இச்செயலின் நோக்கமாக இருந்தது.

1985 ஏப்ரல் மாதம் 14ம் திகதி காலை 9 மணிக்கு அக்கரைப்பற்றிலிருந்து 10 மைல் தொலைவிலுள்ள காரைதீவு என்னும் தமிழ் கிராமத்திலிருந்து 13 தமிழ் பிரிவினைவாதிகளைக் கொண்ட ஒரு கோஷ்டி ஜீப் வண்டியொன்றில் அக்கரைப்பற்றுக்குள் வெகு வேகமாக நுழைந்தது. ஆயுத பாணிகளாக வந்த இந்தப் பிரிவினைவாதிகள் சாரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர். அக்கரைப்பற்று பள்ளிவாசலுக்கு முதல் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. பிரதானச் சந்தை சந்தியை நோக்கி விரைந்த ஜீப் வெகு வேகமாக ஓட்டப்பட்டதன் காரணமாகச் சந்தி வளைவில் தடம் புரண்டது. பிரயாணம் செய்த பலர் விபத்தில் மரணமடைய எஞ்சியோர் பொலிசாரினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்திலிருந்து ஆரம்பித்த தமிழ் - முஸ்லிம் இனக்கலவரம், கல்முனை, காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாளைச்சேனை, மூதூர், கிண்ணியா ஆகிய இடங்களுக்கும் வேகமாக பரவியது. ஆயுதம் தாங்கிய பயங்கரவாதிகளினால் பல நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டனர். முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் சொந்தமான பல கோடி ரூபாய்கள் பெறுமதியான சொத்துக்கள் எரிக்கப்பட்டு, அழிக்கப்பட்டன. இந்த 1985 ஏப்ரல் கலவரங்களின் போதுதான் கிழக்குமாகாணத்தில் முதல்தடைவையாக தமிழர்களும் - முஸ்லிம்களும் இன அடிப்படையில் ஒருவரோடொருவர் மோதிக் கொண்டனர்.

1985ஆம் ஆண்டு அக்டோபர் 28ம் திகதி மூதூரில் கலிபா



011900

கலீல் எனும் முஸ்லிம் இளைஞர் தனது வீட்டிலிருந்து தமிழ் பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு மின்கம்பத்தில் கட்டப்பட்டார். இதன் காரணமாக 34 தமிழ் வீடுகள் உடைக்கப்பட்டன. தமிழர்கள் ஆத்திரம் கொண்டு மூன்று முஸ்லிம்களையும் கொன்று 324 வீடுகளையும் உடைத்தனர் 25 கடைகளும் எரிக்கப்பட்டன.

1988 மார்ச் 6ம் திகதி காத்தான்குடி நகர சபை முன்னாள் தலைவர் அல்ஹாஜ் அஹமட்லெப்பை கொல்லப்பட்டார். 1990ம் ஆண்டு பள்ளியில் தொழுது கொண்டிருக்கையில் 106 முஸ்லிம்கள் தமிழர்களால் கொலை செய்யப்பட்டனர். அதேவாரத்தில் மக்கா ஹஜ்யாத்திரையை முடித்துவிட்டு வீடுதிரும்பிய ஹாஜிகள் உட்பட 86 முஸ்லிம்கள் களுவாஞ்சிக்குடியில் கடத்தப்பட்டு தமிழர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.

இரண்டு வாரங்களுக்குப் பின்னர் ஏறாவூரில் சத்தாம் ஹுசைன் கிராமம் தமிழ் பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டு 100க்கும் கூடுதலான முஸ்லிம் ஆண், பெண், குழந்தைகள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

1989 நவம்பர் மாதம் தமிழ் தேசிய இராணுவத்தினரால் காரைதீவில் 24 முஸ்லிம் பொலிஸ் றிசேவ் உத்தியோகத்தர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1985 ஆண்டு மே மாதம் தமிழ் முஸ்லிம் கலவரம் ஏற்பட்டு ஏறக்குறைய ஒரு மாதத்தின் பின், மூதூரில் பயங்கரவாதிகளுக்கெதிராக இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதலின் விளைவாக தமிழர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். இந்தச் சிக்கலான கால கட்டத்தில் தமிழர்களுக்கு உதவிக்கரம் நீட்டியவர்கள் முஸ்லிம்களே. ஆயினும் முஸ்லிம்களினால் காட்டப்பட்ட இந்த பரிவு தமிழர்களின் போக்கில்

முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

தமிழ் பயங்கரவாதிகள் மூதூரின் முஸ்லிம் உதவி அரசாங்க அதிபர் ஜனாப் ஹபீப் முஹம்மதை 1987 செப்டம்பர் 3ம் திகதி படுகொலை செய்தனர். இச்சம்பவத்திற்கான தமது எதிர்ப்பை கிழக்கு மாகாணத்தில் வாழும் அனைத்து முஸ்லிம்களும் பகிரங்கமாகவே வெளிப்படுத்தினர். இந்த அனுதாப வெளிப்படுத்தலினால் ஆத்திரமுற்ற தமிழர்கள் இதற்கு எதிரான ஒரு ஆர்ப்பாட்டத்தில் 1987 செப்டம்பர் 10ம் திகதி கல்முனையில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகள், அரிசி ஆலைகள், வீடுகள் என்பன கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப்பட்டன. இந்தத் தாக்குதல்கள் நடைபெறும்போது இந்திய அமைதிகாக்கும் படையும் அங்கே இருந்தது. தமிழர்களினால் அழிக்கப்பட்ட முஸ்லிம்களின் சொத்துக்களின் பெறுமதி சுமார் 6 கோடியே 70 இலட்சம்.

1987ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ம் திகதி மூதூரில் ஆயுதமேந்திய பிரிவினைவாதிகளால் முஸ்லிம்கள் மீது பாரிய தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலின்போது இந்திய அமைதிகாக்கும் படையினரும் அங்கிருந்தனர். இத்தாக்குதலினால் பாதிக்கப்பட்டு மூதூரிலிருந்து வெளியேறிய ஆயிரக்கணக்கான முஸ்லிம் அகதிகளின் பராமரிப்பு வேலைகளில் துரிதமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே முன்னாள் மூதூர் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான ஜனாப் அப்துல் மஜீத் 1987 நவம்பர் 13ம் திகதி தமிழ்ப் பயங்கரவாதிகளால் கொலை செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பிரதானமான முஸ்லிம் பட்டணமாகிய ஓட்டமாவடியில் 1987 டிசம்பர் 2ம் திகதி இந்திய அமைதி காக்கும் படையினருக்கும் தமிழ் போராளிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் போது 26 முஸ்லிம்கள்

கொல்லப்பட்டதுடன் 200 முஸ்லிம்கள் காயப்படுத்தப்பட்டனர். முஸ்லிம்களுக்கு சொந்தமான ஏராளமான வீடுகளும் கடைகளும் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. முஸ்லிம் பெண்கள் பலர் இந்திய அமைதிப்படைவீரர்களால் கற்பிழக்கப்பட்டதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டன. 14,000 முஸ்லிம்கள் அகதிகளாக கிழக்குமாகாணத்திலிருந்து தப்பி ஓடி வடமத்திய மாகாண நகரமான பொலன்னறுவையில் தஞ்சம் புகுந்தனர்.

1987ம் ஆண்டு டிசம்பர்மாதம் 30ம் திகதி 30,000 முஸ்லிம்களைக் கொண்ட மட்டக்களப்பில் மிகப் பிரதானமான முஸ்லிம் நகரமாகிய காத்தான்குடி ஆயுதமேந்திய தமிழ் பிரிவினைவாதிகளினால் தாக்கப்பட்டது. இந்தக் கொடூரத்தாக்குதலின்போது 60 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். 200க்கு மேற்பட்டோர் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுக்குள்ளாகினர். 20 கோடி ரூபாய் பெறுமதிக்கும் கூடுதலான சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் நாசம் செய்யப்பட்டன. இவ்வனர்த்தங்கள் யாவும் இந்திய அமைதிகாக்கும் படையினர் இங்கு நிலைகொண்டிருந்த போதே நடைபெற்றன. இரண்டே இரண்டு நாட்களே தாக்குதல் நடைபெற்றபோதிலும் காத்தான்குடி மீதான முற்றுகை 1988 ஜனவரி 8ம் திகதிவரை நீடித்தது. இந்த முற்றுகைக் காலத்தின்போது காத்தான்குடிக்கு அல்லது காத்தான்குடியிலிருந்து சகல போக்குவரத்துகளும் தமிழ் பயங்கரவாதிகளினால் தடைசெய்யப்பட்டன.

1992 ஒக்டோபர் மாதம் தமிழ் பயங்கரவாதிகள் பொலன்னறுவை மாவட்டத்தில், அக்பர்புரம், அஹமட்புரம், பள்ளிய கொடல்ல, ஆகிய கிராமங்களைத் தாக்கி 200க்கும் கூடுதலான முஸ்லிம்களைப் படுகொலை செய்தனர்.

1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் யாருமே எதிர்பாராத வகையில் சடுதியாக வடமாகாண முஸ்லிம் கிராமங்களில் தமிழ்

பயங்கரவாதிகள் ஒலிபெருக்கி மூலம் முஸ்லிம்கள் தமது வீடுகளையும் உடமைகளையும் விட்டு விட்டு 48 மணித்தியாலங்களுக்குள் வெளியேற வேண்டும். அவ்வாறு வெளியேறாவிட்டால் கொல்லப்படுவார்கள் என்று அறிவித்தனர் இவ்வறிவித்தல் எருக்கலம்பிட்டியில் ஒக்டோபர் 24ஆம் திகதியும் விடத்தல் தீவு முசலிப்பகுதிகளில் ஒக்டோபர் 25ஆம் திகதியும் யாழ்ப்பாண நகரில் 29 ஆம் திகதியும் அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து முஸ்லிம்களின் நகைகளையும், பெறுமதியான பொருட்களையும் தமிழ் பயங்கரவாதிகள் வீடு விடாகச் சென்று கொள்ளையடித்தனர். இதை எதிர்த்த முஸ்லிம்களைத் தமிழ் பயங்கரவாதிகள் மிக மோசமாகத் தாக்கித் தண்டித்தனர். வடமாகாண முஸ்லிம்கள் நிர்க்கதியான நிலையில் குடும்பங் குடும்பமாக சொல்லொனாத் துயரத்தோடு 100க்கும் மேற்பட்ட முஸ்லிம் கிராமங்களிலிருந்து தமிழர்களால் விரட்டியடிக்கப்பட்டனர். 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28ம் திகதியிலிருந்து வெளியேறி 31ஆம் திகதிக்கு முன்னர் வடமாகாண எல்லையைக் கடந்தனர். மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எருக்கலம்பிட்டி, தாராபுரம், புதுக்குடியிருப்பு, மன்னார் சோனகத் தெரு, கரிசல் ஆகிய கிராமங்களைவிட்டு ஒக்டோபர் 28-31ஆம் திகதிகளுக்கிடையில் வெளியேறி கடல்மார்க்கமாக கற்பிட்டியை அடைந்தனர். மன்னார், விடத்தல் தீவு மக்கள் ஒக்டோபர் 27-31ஆம் திகதிகளில் வெளியேறி ஒக்டோபர் 30-31ஆம் திகதிகளில் மதவாச்சியை அடைந்தார்கள். முசலிப்பகுதி முஸ்லிம்கள் வில்பத்துக் காட்டினூடாக ஒக்டோபர் 30ம் திகதி தமிழ் பயங்கரவாதிகளால் வாகனங்களில் ஏற்றிவந்து, கிளிநொச்சியில் விடப்பட்டனர். இவர்களும் வவுனியா, முல்லைத்தீவு முஸ்லிம்களும் இதேகாலத்தில் மதவாச்சியை அடைந்தனர்.

1990ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி தமிழ் போராளிகளால் நடத்தப்பட்ட இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையால் வடமாகாணமானது முற்றும் முஸ்லிம்களற்ற பிரதேசமாக்கப்பட்டது.

011990

தமிழர்களது தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு கொடுக்காத காரணத்தால் முஸ்லிம்கள் தமக்கிடையே தோன்றியுள்ள ஒரு ஆபத்து எனத் தமிழர்கள் கருதுகின்றனர்.

தமிழ் போராளிகளால் நடத்தப்பட்ட இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையால் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாந் திகதி வடமாகாணமானது முஸ்லிம்களற்ற பிரதேசமாக்கப்பட்டது.

இத்தகைய சம்பவங்கள் ஒரு நிம்மதியற்ற நிலையை வடக்கு, கிழக்கு முஸ்லிம்களிடையே தோற்றுவித்ததுடன் தமிழர்களது தனிநாட்டுக் கோரிக்கை சாத்தியப்படும் பட்சத்தில் அவர்களுடன் காணி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், மற்றும் அரசியல் அதிகாரங்களை நீதி நியாயப்படி பகிர்ந்து கொள்ளக் கூடிய சாத்தியம் ஏற்படப்போவதில்லை என்னும் உணர்வு வடக்கு கிழக்க முஸ்லிம்களிடையே வலுப்பெற்றுள்ளது.

எம்.ஐ.எம்.முஹியத்தீன்

**National Digitization Project**

***National Science Foundation***

Institute : South Eastern University of Sri Lanka

1. Place of Scanning : Main Library, South Eastern University of Sri Lanka, Oluvil
2. Date Scanned : 2018.02.15
3. Name of Digitizing Company : Sanje (Private) Ltd, No 435/16, Kottawa Rd, Hokandara North, Arangala, Hokandara
4. Scanning Officer

Name : I.W.A.C.J. Chandrasena

Signature : Charith

Certification of Scanning

*I hereby certify that the scanning of this document was carried out under my supervision, according to the norms and standards of digital scanning accurately, also keeping with the originality of the original document to be accepted in a court of law.*

Certifying Officer

Designation : Acting Librarian

Name : M. M. Mashroofa

Signature : [signature]

Date : 2018.02.15

*"This document/publication was digitized under National Digitization Project of the National Science Foundation, Sri Lanka"*